1974 மார்ச் 28]

நடுவட்டத்தில் டைவர்ஷன் அணைத்திட்டம்

*662 வினு—திரு. கு. அ. பொம்மன்: மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நடுவட்டம், டைவர்ஷன் அணைக்கட்டின் மதிப்பீடு எவ்வளவு?

(இ) இந்தத் திட்டம் எப்போது பூர்த்தி செய்யப்படும்?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: (அ) & (இ) தலைவர் அவர்களே, திருத்தப்பட்ட மதிப்பீட்டின்படி இத்திட்டத்தை நிறைவேற்ற சுமார் ரூ. 2.20 லட்சம் செலவாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

தும்மக்குண்டு ஊராட்சியில் மின் சக்தி வழங்கல்

*663 வினு—திரு. நா. வெ. குருசாமி: மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், ஆண்டிப்பட்டி ஒன்றியம், தும்மக்குண்டு ஊராட்சி மன்றத்தை சேர்ந்த கர்டாஞ எஸ்டேட்டுக்கு 1971-ம் வருடம் ஊராட்சி மன்றத்தால் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியும், இன்னமும் லைட்டு போடாமல் இருப்பதன் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவர் அவர்களே, கர்டாஞ எஸ்டேட்டு ஒரு தனிப்பட்டவரின் பட்டா நிலத்தில் இருக்கிறது. அதைப் பஞ்சாயத்துக்கு மாற்றிக் கொடுத்தால் மின் விசை கொடுக்கப்படும்.

திரு. நா. வெ. குருசாமி: தலைவர் அவர்களே, அந்த ஊராட்சி மன்றமே தீர்மானம் நிறைவேற்றி, அங்குள்ள மக்களுக்கு அவர்களின் வீடுகளுக்கு உடனடியாக மின் இணைப்புக் கொடுக்கவேண்டுமென்று 71-ம் ஆண்டே தீர்மானம் நிறைவேற்றியிருக்கிருர்கள். ஆகவே, அவர்களுக்கெல்லாம் மின் இணைப்புச் செய்துதரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவர் அவர்களே, இந்த இடம் ஒரு தனிப்பட்டவருக்குச் சொந்தமானதாக இருக்கிறது. அதைப் பஞ்சாயத்துக்கு எழுதிக்கொடுத்தால் மின் இணைப்புக் கொடுப்பதற்கு ஆவன செய்யப்படும்.

திரு. நா. வெ. குருசாமி: தலைவர் அவர்களே, அது தனியார் இடம் என்பது சம்பந்தப்பட்ட ஊராட்சிக்கும், ஊராட்சி ஒன்றியத்திற்கும் தெரிவிக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவர் அவர்களே, ஏற்கனவே வந்து பார்த்தவர்களிடம் சொல்லி அனுப்பியிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப் பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

பல்லவன் போக்குவரத்துப் பேருந்துக்கு தாம்பரம் அருகில் ஏற்பட்ட விபத்து குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் ஆர். சொன்னப்ப நாடார், கே. டி. கே. தங்கமணி, ஏ. ஆர். மாரிமுத்து ஆகிய மூன்று பேர்களும்

'the disastrous accident that happened yesterday morning to Pallavan Transport Bus very near to Tambaram resulting in the death of seven passengers including a woman and causing serious injuries to 48 other passengers'.

என்ற பொருள் பற்றி ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அது எந்தவகையில் இந்த சபையை ஒத்திவைத்து பேச வேண்டிய முக்கிய விஷயம் என்பதை அவர்களை விளக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, இந்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை இந்த அவையிலே விவாதிக்க வேண்டு மென்ற தீர்மானத்தை முன்மொழிந்து ஓரிரு கருத்துக்களைக் கூறி, இது எப்படி விதி முறைக்கு உட்பட்டதாக இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன்.

திடீரென்று, இந்த மன்றம் நடந்துகொண்டிருக்கிற நேரத்தில் ஒரு நிகழ்ச்சி அண்மையில் நடந்திருக்கிறது. அதன் காரணமாக இந்த ஒத்தி வைப்புத் தீர்மானம் எழுந்திருக்கிறதென்று தெரிவித்துக்கொள்கிறேன்.